

# கற்க கசடற

# 10

# தமிழ் வினா வங்கி

**இரா.பாலகிருஷ்ணன்** எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்.,
தமிழாசிரியர். அரசு மேல்நிலைப்பள்ளி,
பெத்திக்குட்டை, கோயம்புத்தூர் – மாவட்டம்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# தமிழ்

# பத்தாம் வகுப்பு

# வினாவங்கி 2024–2025

- இயல் வாரியான அலகுத்தேர்வு வினாத்தாள்,
- அரையாண்டுத்தேர்வு மாதிரி வினாத்தாள்,
- திருப்புதல் தேர்வு மாதிரி வினாத்தாள்,
- அரசு பொதுத்தேர்வு மாதிரி வினாத்தாள்,
- அரசு மாதிரி வினாத்தாள் 2019,
- அரசு பொதுத்தேர்வு வினாத்தாள்
- செப்டம்பர் 2020 முதல் ஜூலை 2024 வரை உள்ளன.

ஆக்கம் :–
இரா.பாலகிருஷ்ணன்,எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்.
தமிழாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
பெத்திக்குட்டை,
கோயம்புத்தூர் – மாவட்டம்.
அலைப்பேசி: 9751602535

www.Padasalai.Net


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அரையாண்டு பொதுத்தேர்வு மாதிரி வினாத்தாள் டிசம்பர் - 2024**

**பத்தாம் வகுப்பு**

**மொழிப்பாடம்: தமிழ்**

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (15 மதிப்பெண்கள்)**

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15 x 1 = 15

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது-

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள நயங்கள் யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

3. 'பெரிய மீசை' சிரித்தார் - 'பெரிய மீசை' என்ற சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

4. உலகக் காற்று நாளாகக் கொண்டாடப்படும் தினம்............

அ) ஜூலை 15 ஆ) ஏப்ரல் 15 இ) ஜூன் 15 ஈ) நவம்பர் 15

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6. அருந்துணை என்பதைப் பிரித்தால்.....................

அ) அருமை+ துணை ஆ) அரு + துணை

இ) அருமை+ இணை ஈ) அரு + இணை

7. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்ககாலத்தில் மொழியெர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழியெர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

8. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

ஈ) மருதம், நெய்தல், பாலைநிலங்கள்

9. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது -இத்தொடருக்கான வினா எது?

அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்? ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா? ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

10. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ............

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்

இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

11. வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு என்னும் நூலின் ஆசிரியர்...................

அ) விநாயகம் ஆ). தியாகராஜன்

இ) காந்திராமன் ஈ) மா.பொ.சிவஞானம்

பாடலைப் படித்து பிவரும் வினாக்களுக்கு விடை தருக.

தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே'
இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!
மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!''

12) தென்னன் என்பது யாரைக் குறிக்கும்?

அ)சேரன் ஆ) சோழன்

இ) பாண்டியன் ஈ) பல்லவன்

13) தென்னன் மகளே எனக் குறிப்பிடப்பட்டது..........

அ) திருக்குறள் ஆ) சிலப்பதிகாரம்

இ) தமிழ் ஈ) மணிமேகலை

14) பாப்பத்து என்பது எந்த நூல் தொகுப்பைக் குறிக்கிறது?

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) நாலடியார் ஈ) பதினென் கீழ்கணக்கு

15) இப்பாடலில் வந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

அ) தென்னன், மகளே ஆ) மன்னுஞ் , மணிமேகலை

இ) தென்னன், இன்னறும் ஈ) பாப்பத்தே! , சிலம்பே!

பகுதி - II (மதிப்பெண்கள்:18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி 4 x 2 = 8

21ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) சங்க காலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்.

ஆ) தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.

17) 'நச்சப் படாதவன்' செல்வம் - இத்தொடரில் 'நச்சப் படாதவன்' என்னும் சொல்லுக்குப் பொருளைத் தருக.

18) "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன்பால் பொழிந்த
பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"

இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்?

19) வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

20) தாய் மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.

21) `தரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. 5 x 2 = 10

22) வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித்தொடர்களை இணைத்து எழுதுக.
நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

23) பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

| தங்கும், மரம் வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து |
|---|


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தெருக்கூத்தில் நடிகருக்குக்கைதட்டலே......... அதில்
வரும்காசு குறைந்தாலும் அதுவேயவர் .........

24) இரு சொற்களையும் பயன்படுத்தி ஒரேதொடரில் அமைத்து எழுதுக.
சிலை - சீலை

25) கலைச்சொற்கள் தருக.
1. Nanotechnology 2. Emblem

26) புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

27) பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபடவருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

28) அமர்ந்தான் - பகுபதஉறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III (மதிப்பெண்கள்:18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி 2 x 3 = 6

29) சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30) இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

31) செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி 2 x 3 = 6

32) வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
33) "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
34) அடிபிறழாமல் எழுதுக.
தென்னன் மகளே - எனத்தொடங்கும் அன்னை மொழி பாடல்.

(அல்லது)

வெய்யோன் ஒளி - எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளி 2 x 3 = 6

35) ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36) எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

37) தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5 x 5 = 25

38) அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் விளக்குக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)


ஆ) கருணையன் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39) அ) மாநில அளவில் நடைபெற்ற ``மரம் இயற்கையின் வரம்'' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிடவேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40) **படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**



41) கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்ப படிவத்தை நிரப்புக.

மதுரை வட்டம், பாரதி தெருவில் வசிக்கும், கலையரசன் என்பவரது மகன் செழியன், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பதினோராம் வகுப்பில் கணினி அறிவியல் பாடப்பிரிவில் ஆங்கில வழியில் சேர விரும்புகிறார். தேர்வர் தம்மை செழியனாக நினைத்து உரிய படிவம் நிரப்புக.

42) அ) தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று வாழ்ந்து மறைந்தவர் கலைஞர். அவர் எழுதியது தமிழின் சுவையை; அவர் எண்ணியது தமிழரின் உயர்வை; அவர் உயர்த்தியது தமிழ்நாட்டின் கலைகளை! நீங்கள் படித்து முடித்தப்பின் உங்கள் துறையின் அறிவைக்கொண்டு தமிழுக்குச் செய்யக்கூடிய தொண்டுகளை வரிசைப்படுத்துக.

| | |
|---|---|
| 1 | என் துறையில் வல்லுநரானபின், அத்துறையினைப் பற்றிய நூல்களைத் தமிழாக்கம் செய்வேன். |
| 2 | என் துறையில் இருக்கும் கலைச் சொற்களைத் தமிழில் மாற்றி மக்களின் பொதுப்பயன்பாட்டிற்குக் கொண்டுவருவேன். |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |

(அல்லது)

ஆ) <u>மொழிபெயர்க்க.</u>

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

| **யாழிசை** | It's like new lute music |
|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப்பார்த்தேன்;<br>பேத்தி,<br>நெட்டுருப்பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>பாரதிதாசன் | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation.<br>Translated by Kavignar Desini |


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

| | | | |
|---|---|---|---|
| lute music | – | grand-daughter | – |
| chamber | – | rote | – |
| to look up | – | didactic compilation | – |

**பகுதி - V (மதிப்பெண்கள்: 24)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **3 x 8 = 24**

43) அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர் இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.

44) அ) அன்னமையாவின் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து கதையின் மூலம் விளக்குக.

(அல்லது)

ஆ) கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

45) அ) **முன்னுரை - தமிழின் தொன்மை** - ஜி.யு.போப்பின் தமிழ்ப்பணி - வீரமா முனிவரின் தமிழ்ப்பணி - ஆறுமுக நாவலரின் தமிழ்ப்பணி - நான்காம் தமிழ்ச்சங்கம் - உலகத்தமிழ் மாநாடு - முடிவுரை

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்கு சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

திருப்புதல் தேர்வு மாதிரி வினாத்தாள் ஜனவரி - 2025

பத்தாம் வகுப்பு

மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி | மதிப்பெண்கள்: 100

பகுதி - I (15 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி | 15 x 1 = 15

1. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது.
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
2. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' — யார் யாரிடம் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
3. இங்கு நகரப்பேருந்து நிற்குமா? என்று வழிப்போக்கர் கேட்பது ……… வினா
"அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ……… விடை
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறியாவினா, மறை விடை
இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
4. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று …….. …….. வேண்டினார்.
அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக
இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக
5. கூற்று 1 போராட்டப் பண்புடனே வளர்ந்தவர் கலைஞர்.
கூற்று 2: அவருக்குள் இருந்த கலைத்தன்மை வளர அது உதவியது.
அ) கூற்று 1 சரி 2 தவறு ஆ) கூற்று 1 மற்றும் 2 தவறு
இ) கூற்று 1 தவறு 2 சரி <u>ஈ) கூற்று1 மற்றும் 2 சரி</u>
6. 'சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க.
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
7. 'சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்………
அ. வெண்பா ஆ. அகவற்பா இ. கலிப்பா ஈ) வஞ்சிப்பா
8. "எய்துவர் எய்தாப் பழி" — இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ. கூவிளம் தேமா மலர் ஆ. கூவிளம் புளிமா நாள் இ. தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு
9. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ. துலா ஆ. சீலா இ. குலா ஈ. இலா
10. 'வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை...
அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலைவகை
11. தமிழினத்தை ஒன்று படுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ……….. ஜூன்-23
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடை தருக.

"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று"

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?
அ. தேம்பாவணி ஆ. நீதிவெண்பா இ. ஞானம் ஈ. சிலப்பதிகாரம்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. ஆவி - பொருள் தருக

அ. பேய் ஆ. உயிர் இ. நீராவி ஈ. அனைத்தும்

14. மயக்கம் அகற்றுவது எது?

அ. அறிவு ஆ. மாலை இ. கல்வி ஈ. நறுமணம்

15. 'அருந்துவதும்' - என்ற சொல்லின் வாய்பாடு ......

அ. கருவிளங்காய் ஆ. புளிமாங்காய் இ. கருவிளம் ஈ. மனமலர்

## பகுதி - 2

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி** 4 × 2 = 8

**(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வெண்டும்.)**

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
17. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
18. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.
19. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
20. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" — உவமை உணர்த்தும் கருத்து யாது?
21. **'பொருள்'** என முடியும் குறளை எழுதுக.

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 × 2 = 10

22. வேங்கை என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
23. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது.
இதோ.. இருக்கிறதே சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே மின்சாரம் இருக்கிறதா? இல்லையா?
மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
24. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
25. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
உழவர்கள் மலையில் உழுதனர். முல்லைப் பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
26. ''கொள்வோர் கொள்க, குரைப்போர் குரைக்க,
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"
அ) அடி எதுகையை எடுத்தெழுதுக.
ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக - கொள்க, குரைக்க
27. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?
28. **அமர்ந்தான்** — பகுபத உறுப்பிலக்கணம் தருக

## பகுதி - 3

**எவையேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளி.** 2 × 3 = 6

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
30. உரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறேன். இவ்வாறாக மழைப்பொழிவைத் தருகின்றேன். இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மைதானே! இவ்வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் நான் பங்கெடுக்கின்றேன். இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

வினாக்கள் :

(அ) இந்தியாவின் முதுகெலும்பு எது ?


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(ஆ) வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலம் எது ?

(இ) இந்தியாவிற்குத் தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கும் மழையின் அளவு யாது ?

31. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளி.** **2 × 3 = 6**

**(34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.

33. 'சித்தாளின் மனச்சுமைகள், செங்கற்கள் அறியாது' — இடம் சுட்டிப் பொருள் தருக.

34. "**விருந்தினனாக**" எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை எழுதுக. **(அல்லது)**

"**தூசும் துகிரும்**" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளி.** **2 × 3 = 6**

35. தொகைச்சொற்களைப் பிரித்தெழுதி, தமிழ் எண்ணுரு தருக.

மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே , உலகமொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவுபோல் பத்துப்பாட்டோடும் எட்டுத் தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப் பெருமை சாற்றுகிறது.

36. **இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்**

**இன்மையே இன்னா தது** - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**பகுதி - 4**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **5×5=25**

38. அ) முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக **(அல்லது)**

ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக,

39. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. **(அல்லது)**

நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கவிதையாக்குக.



41. நூலக உறுப்பினர் படிவம் நிரப்புக

மதுதர மாவட்டம் பாரதி தெருவில் வசிக்கும் கலையரசன் என்பவரது மகன் செழியனுக்கு, மதுரை மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராக சேருவதற்கு நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42. அ) அட்டவணையில் விடுபட்டதை எழுதுக

| | |
|---|---|
| கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன். | அவற்றின் மதிப்பைக்குறைக்கும் படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன். |
| கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன் | |
| | |

**(அல்லது)**


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

ஆ) மொழிபெயர்க்க.

**The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.**

**குறிப்பு செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைப் பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக,
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி - 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** **3×8=24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைக் கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக. **(அல்லது)**

ஆ) நயம் பாராட்டுக

நிலவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர்வண்டு
பாடுவதும் வியப்போ?

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப் பகுதி கொண்டு விவரிக்க. **(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

**மாணவன்-கொக்கைப்போல, கோழியைப்போல – உப்பைப்போல - இருக்கவேண்டும்-கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும்-குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி-கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் - ஆசிரியர் விளக்கம்-மாணவர் மகிழ்ச்சி**

45. (அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.

குறிப்புகள் : முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்களைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

**(அல்லது)**

(ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.

குறிப்புகள் : முன்னுரை - அறிவியல் கண்டுபிடிப்புகள் வாழ்வை மேம்படுத்தும் அறிவியல் -எதிர்காலத் தொழில் நுட்பம் - மனிதனைக் கட்டுப்படுத்தும் அறிவியல் - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

திருப்புதல் தேர்வு மாதிரி வினாத்தாள் பிப்ரவரி - 2025

பத்தாம் வகுப்பு

மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி - I (15 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15 x 1 = 15

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது-
அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்
ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

3. அருந்துணை என்பதைப் பிரித்தால்.....................
அ) அருமை+ துணை ஆ) அரு + துணை
இ) அருமை+ இணை ஈ) அரு + இணை

4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்:
(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

5. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க.
(அ) கரு (ஆ) க உ (இ) கஙு (ஈ) க.ச

6.'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' -என்று கூறியவர் :
(அ) திரு.வி.க. (ஆ) க.சச்சிதானந்தன் (இ) நம்பூதனார் (ஈ) தனிநாயக அடிகள்

7. மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார் ?
(அ) தமிழழகனார் (ஆ) கம்பர் (இ) தேவநேயப் பாவாணர் (ஈ) வைரமுத்து

8. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ?
(அ) கூவிளம் தேமா மலர் (ஆ) கூவிளம் புளிமா நாள்
(இ) தேமா புளிமா காசு (ஈ) புளிமா தேமா பிறப்பு

9. 'தூசும் துகிரும் ஆரமும் அகிலும்' — இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல்
அ) மணிமேகலை ஆ) தேம்பவாணி இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

11. மலர்விழி பாடினாள் - இத்தொடர்
அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்

செம்பொ னடிச்சிறு கிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

12. பாடலின் இலக்கிய வகை
அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்
இ) எட்டுத்தொகை ஈ) பதினென்கீழ்க்கணக்கு


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

13. 'கிண்கிணி' என்னும் அணிகலன்

அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது

இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

14. குண்டலமும் குழைக்காதும் ? இலக்கணக் குறிப்பு தருக.

அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை

இ) உவமைத்தொகை ஈ) வினைத்தொகை

15. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக:

அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், மைம்பொன்

இ) சரிந்தாட, பதிந்தாட ஈ) பண்டி, குண்டலம்

பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி. 4X2 = 8

21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

ஆ) 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

18. 'நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

19. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

20. " கலைஞர், பழுமரக்கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர். படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்" - பேராசிரியர் அன்பழகனார். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.

21. 'குற்றம் இல்லாமல்'தன் குடிப்பெருமையை உயரச் செய்யும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5 x 2 = 10

வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

22. கலைச்சொற்கள் தருக. (அ) Consulate (ஆ) Folk Literature

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

கூட்டப்பெயர்களை எழுதுக. (அ) கல் (ஆ) ஆடு

23. புறத்திணைகளில் எதிரெதிர்த்திணைகளை அட்டவணைப்படுத்துக.

24. "இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்! சரி, போனை வையி. நாங் கெளம்பிட்டேன்....."

உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

25. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.

26. கலைச் சொற்கள் தருக: அ) Belief ஆ) Philosopher

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா :

கூட்டப்பெயர்களை எழுதுக: அ) கல் ஆ) ஆடு

27. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய் மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே."

பகுதி - III (மதிப்பெண்கள் : 18)

பிரிவு -1

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 2 x 3 = 6

29. " தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம்சுட்டிப் பொருள் விளக்குக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகி, ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது.

(அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.

(ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ? .

(இ) பெய்த மழை இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக

31. ஜெயகாந்தனின் திரைப்படப் படைப்புகளைக் கூறுக.

பிரிவு - 2 2 x 3 = 6

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.

34 -ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "அன்னை மொழியே" - எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல். அல்லது

(ஆ) "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுள்.

பிரிவு - 3 . 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.

35) பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

36) "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

- இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது ?

37. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி எழுதுக.

பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கு விடையளி 5 X 5 = 25

38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின் விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) 'மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பில், மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. வீட்டு எண் : 21, வ.உ. சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச்செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:

**Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the one fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.**

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளி. **8 X 3 = 24**

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளைஎழுதுக. (அல்லது)

ஆ) போராட்டக் கலைஞர் - பேச்சுக் கலைஞர் - நாடகக் கலைஞர் - திரைக்கலைஞர் இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக.

44. அ) புயலிலே ஒரு தோணி' கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

(அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

45. (அ) குறிப்புகளைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் - முடிவுரை.

(அல்லது)

குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.

(ஆ) முன்னுரை - உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை — உழவர்களை மதித்தல் உணவினை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**திருப்புதல் மாதிரி வினாத்தாள் மார்ச்- 2025**

**பத்தாம் வகுப்பு**

**மொழிப்பாடம்: தமிழ்**

நேரம்: 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (15 மதிப்பெண்கள்)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 15 x 1 = 15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் - செப்-2021,ஜூன்-23
   அ) எந் + தமிழ்+ நா ஆ) எந்த + தமிழ்+ நா
   இ) எம் + தமிழ்+ நா ஈ) எந்தம் + தமிழ் + நா
2. 'பெரிய மீசை' சிரித்தார் - 'பெரிய மீசை' என்ற சொல்லுக்கான தொகையின் வகை எது? செப்-2020, ஆக-22
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   **இ) அன்மொழித்தொகை** ஈ) உம்மைத்தொகை
3. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது-
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் **ஈ) சிற்றூர்**
4. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது? செப்-2020,ஆக-21
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் **ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி செப்-2020
   அ) சங்ககாலத்தில் மொழியெர்ப்பு இருந்தது
   ஆ) காப்பியக் காலத்தில் மொழியெர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழியெர்ப்பு இருந்தது
6. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது .........
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
7. "இவள் தலையில் எழுதியதோ, கற்காலமதான் எப்போதும் — இவ்வடிகளில் கற்காலம் என்பது.......
   அ) தலைவிதி ஆ) ஏழ்மை இ) பழைய காலம் ஈ) தலையில் கல் சுமத்தல்
8. 'சிலம்பு அடைந்திருந்த பக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது......
   அ) புததூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
9. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" — தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே-
   அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல், பாடிய இ) கேட்டவர், பாடிய ஈ) பாடல், கேட்டவர்
10. '**பெரிய மீசை**' சிரித்தார் அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?
    அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித் தொகைஈ) உம்மைத் தொகை
11. பின்வருவனற்றுள் முறையான தொடர்?
    அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
    ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
    இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
    ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12,13,14,15) விடைதருக.**

"மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா
இலைகளின்மீதும், நீரலைகளின்மீதும் ஊராய்ந்து மிகுந்த
ப்ராண — ரஸத்தை எங்களுக்குக் கொடு"

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?
    அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கம்பர்
13. இப்பாடலில் வரும் 'ப்ராண' என்பதன் பொருள்?
    அ) காற்று ஆ) நிலம் இ) உடல் ஈ) உயிர்
14. இப்பாடலின் தலைப்பு எது?
    அ. அறிவு ஆ. மாலை இ. கல்வி ஈ. காற்று
15. 'மயலுறுத்து' - என்ற சொல்லின் வாய்பாடு ......
    அ. கருவிளங்காய் ஆ. புளிமாங்காய் இ. கருவிளம் ஈ. கூவிளம்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**பகுதி - 2 (மதிப்பெண்கள்: 18)**

பிரிவு - 1 4 x 2 = 8

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 4×2=8

**(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

16. வசன கவிதை - குறிப்பு வரைக.
17. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
18. 'மொழிபெயர்ப்பு' குறித்து மணவை முஸ்தபா கூறுவது யாது?
19. கரகாட்டம் குறிப்பு வரைக
20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக
21. '**வினை**' என முடியும் குறளை எழுதுக.

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5×2=10

22. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் — இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?.
23. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
24. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.
    உழவர்கள் மலையில் உழுதனர் முல்லைப்பூச் செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
25. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.
    பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.
26. வெண்பாவின் பொது இலக்கணங்களில் எவையேனும் இரண்டினைக் கூறுக.
27. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.
    தாமரை இலை நீர்போல, கண்ணினைக் காக்கும் இமைபோல
28. **வந்தனன்** - பகுபத உறுப்பிலக்கணம் தருக

**பகுதி - 3**

**எவையேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளி.** 2×3=6

29. பூவின் நிலைகளைக் குறிக்கும் பெயர்களை எழுதுக.
30. மொழிபெயர்ப்பின் செம்மை குறித்து எழுதுக.
31. தமிழகத்தின் தெற்கெல்லைப் போராட்டம் குறித்து எழுதுக

**எவையேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளி.** 2×3=6

**(34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?
34. "**அருளைப் பெருக்கி**" எனத் தொடங்கும் நீதிவெண்பாப் பாடலை எழுதுக. **(அல்லது)**
    "**நவமணி**" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை எழுதுக.

**எவையேனும் இரண்டு வினாவிற்கு மட்டும் சுருக்கமான விடையளி.** 2×3=6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். — இப்பத்தியிலுள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.
36. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை, இன்மை புகுத்தி விடும்." — இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.
37. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக

**பகுதி - 4 (மதிப்பெண்கள்: 25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 5×5=25

38. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

    **(அல்லது)**


    ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.
39. மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

    **(அல்லது)**

    ஆ)உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால், இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின் வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. மே-2022


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. காட்சியைக் கவிதையாக்குக.



41. மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவம் நிரப்புக.

வீட்டு எண் 14, வ.உ.சி தெரு, தஞ்சாவூரில் வசித்துவரும் மோகன் மகள் அனிதா தஞ்சாவூரில் அரசு மேல் நிலைப் பள்ளியில் இயற்பியல் பாடப்பிரிவில் ஆங்கில வழியில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை அனிதாவாக கருதி படிவத்தை நிரப்புக.

42. கீழ்க்கண்டப் பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

"கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்,
கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை
காசிம்புலவரை குணங்குடியாரை சேகனாப் புலவரை,
செய்குத்தம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ"

(அல்லது)

ஆ) மொழிபெயர்க்க.

Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.

குறிப்பு செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைப் பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

6. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக,
7. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
8. பெய்த மழை - இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
9. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
10. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

## பகுதி - 5

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 3 × 8 = 24

43. அ).நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் -சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன — இவை குறித்து நாளிதழுக்கு கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக.

44. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

45. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறார் வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்கள் கருத்துகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'பாய்ச்சல்' கதை கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

பொதுத் தேர்வு மாதிரி வினாத்தாள் ஏப்ரல் - 2025

பத்தாம் வகுப்பு

மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி - I (15 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15 x 1 = 15

1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.

அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்

இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

2. 'கேள்வியினான்' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு -

அ) வினையாலணையும் பெயர் ஆ) தொழிற்பெயர் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

3. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்

4. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள் — இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் ஓலையும்

இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

5. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

6. 'பெரிய மீசை' சிரித்தார்' இதில் அமைந்துள்ள தொகையின் வகை எது?

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

7. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால். ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்.

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால். ஈ) அங்கு வறுமை இல்லாததால்.

8. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான், கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது -இத்தொடருக்கான வினா எது?

அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?

ஆ) கலைஞர் என்ற சிறப்புப்பெயர் எப்போது வழங்கப்பட்டது?

இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?

ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

9. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது :

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

10. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

11. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது

அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

" செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

12. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :
அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. செந்தமிழ் என்பது :
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத் தொகை ஈ) உம்மைத்தொகை

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?
அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15. வேறார் புகழுரையும் - இத்தொடரில் 'வேறார்' என்பது :
அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1 4 x 2 = 8

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி.**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க :
(அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.
(ஆ) தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா.இளங்குமரனார்.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. ஜெயகாந்தனின், திரைப்படமான படைப்புகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.

20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 1

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி** 5 x 2 = 10

பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

**22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**
**அ) இன்சொல் ஆ) எழுகதிர்**

**23. 'வாழ்க' — பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
**அ) விடு — வீடு ஆ) கொடு — கோடு**

**25. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.**

**26. கலைச் சொற்கள் தருக: அ) Belief ஆ) Philosopher**
**குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா :**
**கூட்டப்பெயர்களை எழுதுக: அ) கல் ஆ) ஆடு**

**27. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய ;மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?**

**28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**
**"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை**
**தேரும் சிலப்பதி காறமதை**
**ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்**
**ஓதி யுணர்ந்தின் புருவோமே."**

பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1 . 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி

29. தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போர் அறம் என்பது எதைக் குறிக்கிறது?

ஆ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?

இ) எவ்வாறு போர் புரிய வேண்டும்?

31. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. 'இன்றைய சூழலில் நான்' என்று நீர் தன்னைப் பேசுவதாக உன்னுடைய கற்பனையில் மூன்று கருத்துக்களை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி . 2 X 3 = 6

வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.

33. "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "**புண்ணியப் புலவீர்**" - எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்.

**(அல்லது)**

ஆ) "**நவமணி வடக்க யில்**" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 X 3 = 6

வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

35. "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடிஆடி ஓய்ந்துறங்கு!
இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. கவிஞர், தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.

37. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக

பகுதி - IV (மதிப்பெண்கள்: 25) 5 X 5 = 25

அனைத்து வினாக்களுக்கு விடையளி

38. (அ) 'காலக் கணிதம்' கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

"கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக!" - கண்ணதாசன்

(அல்லது)

(ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விளக்குக.

39. (அ) கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாடு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42. (அ) நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன் பிறந்த வருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்த சமயத்தில் சினம் கொள்ளத்தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நீவிர் பின்பற்ற வேண்டிய அறங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) மொழி பெயர்க்க :

**Kalaignar Karunanidhi is known for his contributions to Tamil literature. His contributions cover a wide range: poems, letters, screenplays, novels, biographies, historical novels, stage-plays, dialogues and movie songs. He has written Kuraloviam for Thirukural, Tholkaappiya Poonga, Poombukar, as well as many poems, essays and books. Apart from literature, Karunanidhi has also contributed to the Tamil language through art and architecture. Like the Kuraloviyam, in which Kalaignar wrote about Thirukkural, through the construction of Valluvar Kottam he gave an architectural presence to Thiruvalluvar, in Chennai. At Kanyakumari, Karunanidhi constructed a 133-foot-high statue of Thiruvalluvar in honour of the scholar.**

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமூக.அமைப்பின் சமூக முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர் ஜெயகாந்தன். நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபி - மானத்தை வாசகர் நெஞ்சங்களில் விதைத்தவர். இவருடைய படைப்புகளுக்குக் குடியரசுத்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

தலைவர் விருது, சாகித்திய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது மற்றும் ஞானபீட விருது, தாமரைத்திரு விருதுகளும் கிடைத்துள்ளன. "நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும், எனது தனி முயற்சியின் பயனுமாகும்" என்று கூறுகிறார் ஜெயகாந்தன். 'அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது' என்பது அன்னாரின் அசைக்க முடியாத நம்பிக்கை.

(1) ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?

(2) மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சில் விதைத்தவர் யார்?

(3) வாசகர் மனதில் ஜெயகாந்தன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தினார்?

(4) எது படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது?

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி.** **8 X 3 = 24**

43. அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக.

(அல்லது)

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. (அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - கல்பனா சாவ்லா இளமைப் பருவம் - விண்வெளிப் பயணம் விண்வெளி சாதனைகள் - முடிவுரை

(அல்லது)

(ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற கலைத்திருவிழாவிற்கு சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக,


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அரசு மாதிரி வினாத்தாள் - 2019

பத்தாம் வகுப்பு

மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

## பகுதி - I (15 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15 x 1 = 15

1. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்
2. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் தொடர் இடம்பெற்ற நூல் -
   அ) கொன்றை வேந்தன் ஆ) குறுந்தொகை
   இ) திருக்குறள் ஈ) நற்றிணை
3. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்பது---------------- வினா.
   "அதோ, அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ----------------- விடை.
   அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
   இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
4. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி -
   அ) ஜால்ரா ஆ) பறை இ) உறுமி ஈ) நாகசுரம்
5. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' - இவ்வடி குறிப்பிடுவது -----------------
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை
6. காற்றின் மெல்லிய ----------- பூக்களைத் தலையாட்டவைக்கிறது. கைகளின்
   நேர்த்தியான ---------பூக்களை மாலையாக்குகிறது.
   தொழிற்பெயர்களைப் பொருத்தித் தொடர்களை முழுமை செய்க.
   அ) தொடுத்தல், எடுத்தல் ஆ) தொடுதல், தொடுத்தல்
   இ) எடுத்தல், தொடுதல் ஈ) தொடுத்தல், தொடுதல்
7. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
   இ) உருவகம் ஈ) தீவகம்
8. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன்பெற
   எடுத்தியம்புகின்றன" - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.
   அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை - நல்வினை, தீவினை
   ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை
   இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்
   ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல் - பனை, திணை
9. 'கேள்வியினான்' என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு -
   அ) வினையாலணையும் பெயர் ஆ) தொழிற்பெயர் இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை
10. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர்
    அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
    இ) செய்தித்தொடர் ஈ) கலவைத்தொடர்
11. "காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்" நிலத்துக்கு நல்ல உரங்கள் — இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.
    அ) இலையும் சருகும் ஆ) தோகையும் ஓலையும்
    இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

12. இப்பாடலின் ஆசிரியர் -

அ) ஔவையார் ஆ) நப்பூதனார்

இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் -

ஆ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல்

இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

14. 'நனந்தலை உலகம்' - இத்தொடரின் பொருள்?

ஆ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம்

இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ) கோடுகொண்டு, பெரும்பெயல்

இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த

பகுதி — II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு — 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி 4 X 2 = 8

21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

ஆ)1956 ஆம் ஆண்டு நவம்பர் 1ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது?

18. 'நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்' - இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

19. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ள இருகாப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

20. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?

21. 'கண்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளி 5 X 2 =10

22.அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது.
(வழுவை வழாநிலையாக மாற்றுக)

23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.

தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து

அ) வாழ்க்கையில் ------------------மீண்டும் வெல்லும் - இதைத்
தத்துவமாய்த்----------------- கூத்து சொல்லும்.

ஆ) தெருக்கூத்தில் நடிகருக்குத் கைத்தட்டலே--------- அதில் வரும் காசு


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறைந்தாலும் அதுவேயவர் -----------

24. **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

சிறு - சீறு

25. **கலைச்சொற்கள் தருக.**

அ) **Modern Literature** ஆ) **Epic Literature**

**குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**

**கல், பழம் - இச்சொற்களுக்கான கூட்டப் பெயர்களை எழுதுக.**

26. **தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.**

27. **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி . மலையை வென்றவர்கள் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

28. **அறியேன் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** **2 X 3 = 6**

29. நீவிர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.

30. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூறு ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.

31. **உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

**அ) விருந்தினர் என்போர் யாவர்?**

**ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது?**

**இ) இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** **2 X 3 = 6**

34-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. "உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

"**நவமணி வடக்க யில்போல்**" எனத் தொடங்கும் **தேம்பாவணிப் பாடல்.** (அல்லது)

"**வாளால் அறுத்துச் சுடினும்**" எனத் தொடங்கும் **பெருமாள் திருமொழிப் பாடல்.**

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி** **2 X 3 = 6**

35. "**கண்ணே கண்ணுறங்கு!**
**காலையில் நீயெழும்பு!**
**மாமழை பெய்கையிலே!**
**மாம்பூவே கண்ணுறங்கு!**


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடினேன் தாலாட்டு!

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!" - இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர் வகைகளை எழுதுக.

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்

பொருளல்ல தில்லை பொருள் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

37. தன்மை அணி குறித்து எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5 X 5 = 25

38.அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின் விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) 'மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பில், மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.

42. அ) தமிழகப் பாரம்பரிய கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிரும்புவனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.

(அல்லது)

ஆ) பிறந்தநாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன். எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.

ஆ) மொழிபெயர்க்க.

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஒரு மொழி, பொதுமக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொதுமக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என ஒரேசொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப்பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப்பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது என்பதை அறிகிறோம். தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.

அ) ஒரு மொழியின் இலக்கியம் யாரால் அமையப்பெறும்?

ஆ) தமிழில் இலையைக் குறிக்கும் பல சொற்கள் யாவை?

இ) தமிழ்நாட்டின் பொருள் வளத்தினை எவ்வாறு அறிவீர்கள்?

ஈ) தமிழ்நாட்டில் கூலங்கள் எத்தனை வகைப்பட்டனவாக விளங்குகின்றன?

உ) ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கும் சொல் எது?

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளி.** 8 X 3 = 24

43. அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.

(அல்லது)

ஆ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே — வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே — வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

- கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

44. அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) கு.அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

45.அ)குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி,அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். - இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2020

பத்தாம் வகுப்பு

மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி - I (15 மதிப்பெண்கள்)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.

அ) உதியன், சேரலாதன் ஆ) அதியன், பெருஞ்சாத்தன்

இ) பேகன், கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன், திருமுடிக்காரி

2.'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

3. 'பெரிய மீசை' சிரித்தார்' இதில் அமைந்துள்ள தொகையின் வகை எது?

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

4. 'உனதருளே பார்ப்பன் அடியேனே'. யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வர்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

5. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியிட்ட தொடரைத் தேர்க.

அ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம உடையார்' என்று ' அறுதியிட்டுக்' கூறுகிறார்.

ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஈ) திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

6. ''உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்'' பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள யாவை?

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைப ஈ) உவமை, எதுகை

7. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன். ? இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

8. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.

அ) மொட்டின் வருகை
ஆ) வனத்தின் நடனம்
இ) உயிர்ப்பின் ஏக்கம்
ஈ) நீரின் சிலிர்ப்பு

9. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

1) வினைமுற்று - i) கெடு
2) தொழிற்பெயர - ii) கட்டு
3) முதனிலைத் தொழிற்பெயர - iii) எய்தல்
4) வினையடி - iv) வந்தான்

அ) 1-iv, 2-iii, 3-ii, 4-i
ஆ) 1-iii, 2-i, 3-iv, 4-ii
இ) 1-iv, 2-iii, 3-i, 4-ii
ஈ) 1-i, 2-iii, 3-ii, 4-iv

10. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக
ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக
இ) தங்கக் கட்டிகளை ஈடாக
ஈ) தங்கக் கட்டிகளை முறையாக

11. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ------------.

அ) நாட்டைக் கைப்பற்றல்
ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல்
ஈ) கோட்டையை முற்றுகையிடல்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

செம்பொ னடிச்சிறு கிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்

12. பாடலின் இலக்கிய வகை

அ) பத்துப்பாட்டு
ஆ) சிற்றிலக்கியம்
இ) எட்டுத்தொகை
ஈ) பதினென்கீழ்க்கணக்கு

13. 'கிண்கிணி' என்னும் அணிகலன்

அ) இடையில் அணிவது
ஆ) தலையில் அணிவது
இ) காலில் அணிவது
ஈ) நெற்றியில் அணிவது

14. குண்டலமும் குழைக்காதும் ? இலக்கணக் குறிப்பு தருக.

அ) எண்ணும்மை
ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத்தொகை
ஈ) வினைத்தொகை

15. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக:

அ) பட்ட, பொட்டொடு
ஆ) செம்பொன், பைம்பொன்
இ) சரிந்தாட, பதிந்தாட
ஈ) பண்டி, குண்டலம்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி = II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு — 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4 x 2 = 8

வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

16. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது?

17. விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க.

அ) ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.

ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.

18. உறங்குகின்ற கும்பகன்ன '
எழுந்திராய் எழுந்திராய்'
காலதூதர் கையிலே '
உறங்குவாய் உறங்குவாய்'
கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

19. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

20. ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் இரண்டினை எழுதுக.

21. 'குற்றம் இல்லாமல்'தன் குடிப்பெருமையை உயரச் செய்யும் கருத்தினைக் கொண்ட திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5 x 2 = 10

22. கலைச் சொற்கள் தருக.

அ) Artifacts ஆ) Myth

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

தொடரில் விடுபட்ட சொற்கள் குறிக்கும் வண்ணங்களின் பெயர்களை எழுதுக.

கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் --------------------புல்வெளிகளில் கதிரவனின் ----------- வெயில் பரவிக் கிடக்கிறது.

23. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.

24. பாலகுமாரன் புதினங்கள் இருக்கிறதா? என்று நூலகரிடம் வினவுவது எவ்வகை வினா?
பிரபஞ்சன் புதினங்கள் இருக்கிறது என்று நூலகர் கூறுவது எவ்வகை விடை?

25. "தம்பி! எங்க நிக்கிறே?" நீங்க சொன்ன எடத்துலதாண்ணே! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது."
உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

26. 'மலைந்து' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. "காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை
செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ" - இப்பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களை எடுத்தெழுதுக.

28. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதி, தொடரில் அமைக்க.

பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.

29. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து மூன்று தொடர்கள் எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net



30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப், பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

அ) போர் அறம் என்பது எதைக் குறிக்கிறது?

ஆ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?

இ) எவ்வாறு போர் புரிய வேண்டும்?

31. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்.... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. 'இன்றைய சூழலில் நான்' என்று நீர் தன்னைப் பேசுவதாக உன்னுடைய கற்பனையில் மூன்று கருத்துக்களை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 X 3 = 6

வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.

33. "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" - இடஞ்சுட்டிப் பொருள் எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "**புண்ணியப் புலவீர்**" - எனத் தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்.

(அல்லது)

ஆ) "**நவமணி வடக்கயில்**" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

பிரிவு - 3 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்

35.ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

36.தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

37. நிரல்நிறை அணியை விளக்குக.

பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கு விடையளி. 5 X 5 = 25

38. அ) காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது)

ஆ) 'சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்' என்ற தலைப்பில் கீழ்க்காணும் குறிப்பினைக் கொண்டு உங்கள் இலக்கிய உரையைத் தொடர்க.

குறிப்பு: அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கைக் காட்சியைப் பெரிய கலை நிகழ்வாகவே காட்டும் கம்பனின் கவி நயம்......

39. அ) நீங்கள் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் குறிப்பிட்டு அந்நூலைப் படிக்குமாறு பரிந்துரை செய்து உங்கள் நண்பருக்கும் கடிதம் ஒன்று எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

ஆ) 'பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்' - குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதற்குத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் பெறக் கடிதம் ஒன்று எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் நயமுற எழுதுக.



41. எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக.

42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) மொழியெர்க்க:

**Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the one fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.**

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மொழி பெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெற முடியும்ள பல அறிவுத் துறைகளுக்கும் தொழில் துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளமுடியும்ளு மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும். வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும். நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெற முடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1) ஒருலகத் தன்மையைப் பெறுவதற்கான முக்கிய வழிமுறையாக எதனைக் கொள்ளலாம்?
2) பிற மொழிகளைக் கற்பதற்கான வாய்ப்புகளைத் தருவன எவை?
(3) தூதரகங்களின் முதன்மையான பணிகளில் ஒன்று எது?
(4) மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்களை எழுதுக.
(5) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி. 3 X 8 = 24

43. அ) விருந்தினர் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு, இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும்.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு - குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) 'புயலிலே ஒரு தோணி' கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும் பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

(அல்லது)

ஆ) 'பாய்ச்சல்' கதையில் அழகு தன்னை மறந்து ஆடியதைப் போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.

45. அ) மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக.

முன்னுரை - என் இளமைப் பருவம் - விடுதலைப் போராட்டத்தில் நான் - பொது நலமே தன்னலம் - எளிமையே அறம் - நாட்டின் முன்னேற்றமே நோக்கம் - எளியோரின் அன்பே சொத்து - முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை - விண்வெளியில் தமிழரின் அறிவு - கல்பனா சாவ்லா - விண்ணியல் அறிவியல் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அரசு வினாத்தாள் - செப்டம்பர் 2021

**பத்தாம் வகுப்பு**

**மொழிப்பாடம்: தமிழ்**

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (15 மதிப்பெண்கள்)**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15 X 1 = 15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால். ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்.

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால். ஈ) அங்கு வறுமை இல்லாததால்.

2. நீலச்சட்டை பேசினார் - இத்தொடரில் 'நீலச்சட்டை' என்னும் சொல்லுக்கான தொகையின் வகையைத் தேர்க.

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை

இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

3. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது :

அ) திருக்குறள் ஆ) புறநானூறு

இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

4. மேன்மை தரும் அறம் என்பது :

அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

இ) புகழ் கருதி அறம் செய்வது

ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

5. திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், புதுச்சேரி, திருநெல்வேலி - இவ்வூர்ப் பெயர்களின் சரியான 'மரூஉ' வரிசையைத் தேர்க.

அ) திருச்சி, புதுவை, நெல்லை, உதகை ஆ) திருச்சி, கோவை, புதுவை, நெல்லை

இ) நெல்லை, உதகை, திருச்சி, கோவை ஈ) உதகை, திருச்சி, புதுவை, கோவை

6. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார் - இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்

அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு

இ) ஐ, கு ஈ) இன், கு

7. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருவூர்ப்பாக்கம் அமைந்துள்ள நகரம்

அ) மதுரை ஆ) புகார்

இ) வஞ்சி ஈ) முசிறி

8. "நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;" - பாரதியார்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) வானத்து - வைத்தாங்கே ஆ) காற்றையும் - குடித்தொரு

இ) நிலாவையும் - குலாவும் ஈ) வைத ;தாங்கே - வெறிபடைத்தோம்

9. 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். - இத்தொடரில் அடிகோடிட்டப் பகுதி குறிப்பிடுவது :

அ) இலையும், சருகும் ஆ) தோகையும், சண்டும்

இ) தாளும், ஓலையும் ஈ) சருகும், சண்டும்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

10. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும்.

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும் ஆ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

இ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் ஈ) ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்

11. ஆண் குழந்தையை 'வாடிசெல்லம்' என்று கொஞ்சுவது :

அ) பால் வழுவமைதி ஆ) திணை வழுவமைதி

இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின் பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."

12. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் :

அ) எந் +தமிழ் +நா ஆ) எந்த+தமிழ் +நா

இ) எம் +தமிழ் +நா ஈ) எந்தம்+தமிழ் +நா

13. 'செந்தமிழ்' என்பது

அ) பண்புத் தொகை ஆ) வினைத்தொகை

இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

14. 'உள்ளுயிரே' என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை

இ) தாய்நாட்டை ஈ) தம் குழந்தையை

15. 'வேறார் புகழுரையும்' - இத்தொடரில் 'வேறார்' என்பது :

அ) தமிழர் ஆ) சான்றோர்

இ) வேற்று மொழியினர் ஈ) புலவர்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி** 4 x 2 = 8

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க :

(அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.

(ஆ) தமிழ்த் தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு.இரா.இளங்குமரனார்.

17. வசன கவிதை - குறிப்பு வரைக.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

19. ஜெயகாந்தனின், திரைப்படமான படைப்புகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.

20. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி** . 5 x 2 = 10

வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

22. கலைச்சொற்கள் தருக. (அ) Consulate (ஆ) Folk Literature

<u>குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா</u>

கூட்டப்பெயர்களை எழுதுக. (அ) கல் (ஆ) ஆடு

23. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

24. "இப்ப ஒசரமா வளந்துட்டான்! ஒனக்கு அடையாளமே தெரியாது! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன்!


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

சரி, போனை வையி. நாங் கௌம்பிட்டேன்....."

உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

25. 'மயங்கிய' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

26. வெண்பாவின் ஓசையையும், ஆசிரியப்பாவின் ஓசையையும் எழுதுக.

27. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

28. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

மேகலை, தேன், பூ, விண், மழை, மணி

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. 2 X 3 = 6

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும்சி ல்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ் நாட்டிலுள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம் பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.

(அ) தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்?

(ஆ) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.

(இ) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

### பிரிவு - 2 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.

32. "மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு,
மனத்தை மயலுறுத்துகின்ற இனிய
வாசனையுடன் வா — என்ற பாடல் அடிகளில் :

(அ) அடிமோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

(ஆ) பாரதியார் எதை வாசனையுடன் வரச் சொல்லுகிறார்?

(இ) சுமந்துகொண்டு - என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை அமைக்க.

33. மருவூர்ப்பாக்கக் கடைத்தெருவையும், உங்கள் ஊரில் உள்ள கடைத்தெருவையும் ஒப்பிட்டு மூன்று தொடர்கள் எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "தண்டலை மயில்க ளாடத்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.

(அல்லது)

(ஆ) "அன்னை மொழியே" எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2 X 3 = 6

வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

35. "கண்ணே கண்ணுறங்கு!
காலையில் நீயெழும்பு!


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. கவிஞர், தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக் காட்டுக.

37. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
இயற்கை அறிந்து செயல் - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25) 5 X 5 = 25

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி

38. (அ) 'காலக் கணிதம்' கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

"கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை அறிக!" - கண்ணதாசன்

(அல்லது)

(ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விளக்குக.

39. (அ) கொரோனா பெருந்தொற்று ஊரடங்குக் காலத்தில் உங்கள் நேரத்தை எவ்வாறு பயனுறக் கழித்தீர்கள் என்பதை நண்பனுக்கு விவரித்துக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. கடலூர் மாவட்டம், பாரதியார் நகர், கம்பர் தெருவிலுள்ள 112-ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் நிலவனின் மகள் பூங்குழலி, நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாடு ஆணையத்தில் உறுப்பினராகச் சேர்ந்து கால்பந்து விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர், தம்மை பூங்குழலியாகக் கருதி, கொடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.

42. (அ) நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன்பயில்பவருடனோ, உடன் பிறந்த வருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது. இந்த சமயத்தில் சினம் கொள்ளத்தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா? மாணவ நிலையில் நீவீர் பின்பற்ற வேண்டிய அறங்கள் மற்றும் அதனால் ஏற்படும் நன்மைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

*(ஆ) மொழி பெயர்க்க :*

**If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart. - Nelson Mandela**

**Language is the road map of a Culture. It tells you where its people come from and where they are going - Rita Mae Brown.**

*குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா*

*உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.*

*கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமூக.அமைப்பின் சமூக முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர் ஜெயகாந்தன். நேர்முக, எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபி - மானத்தை வாசகர் நெஞ்சங்களில் விதைத்தவர். இவருடைய படைப்புகளுக்குக் குடியரசுத் தலைவர் விருது, சாகித்திய அகாதெமி விருது, சோவியத் நாட்டு விருது மற்றும் ஞானபீட விருது, தாமரைத்திரு விருதுகளும் கிடைத்துள்ளன. "நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு. என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும், எனது தனி முயற்சியின் பயனுமாகும்" என்று கூறுகிறார் ஜெயகாந்தன். 'அர்த்தமே படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது' என்பது அன்னாரின் அசைக்க முடியாத நம்பிக்கை.*

*(1) ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை?*

*(2) மனிதாபிமானத்தை வாசகர் நெஞ்சில் விதைத்தவர் யார்?*

*(3) வாசகர் மனதில் ஜெயகாந்தன் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தினார்?*

*(4) எது படைப்பின் வடிவத்தை வளமாக்குகிறது?*

*பகுதி - V (மதிப்பெண்கள்: 24)*

*அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி.* **3 X 8 = 24**

*43. (அ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சான்று தந்து விளக்குக.*

*(அல்லது)*

*(ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.*

*44. (அ) இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும்.*

*(அல்லது)*

*(ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.*

*45. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதுக.*

*(அ) முன்னுரை - உழவுத்தொழில் - உழவர் - உழவுத்தொழிலின் இன்றியமையாமை — உழவர்களை மதித்தல் — உணவினை வீணாக்காமல் உண்ணுதல் - முடிவுரை.*

*(அல்லது)*

*(ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.*

*முன்னுரை - 'சாலைப் பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு' - சாலை விதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - 'விபத்தினைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம்' - முடிவுரை.*


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் மே - 2022**

**பத்தாம் வகுப்பு**

**மொழிப்பாடம்: தமிழ்**

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (15 மதிப்பெண்கள்)**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15 x 1 = 15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை
   அ) குலைவகை ஆ) மணிவகை
   இ) கொழுந்துவகை ஈ) இலைவகை
2. 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல்
   அ) அறிவினா ஆ) கொளல் வினா
   இ) அறியா வினா ஈ) ஏவல் வினா
3. 'ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்' - என்ற புதிருக்கான விடையைத் தேர்க.
   அ) காடு ஆ) நாடு இ) வீடு ஈ) தோடு
4. 'தூசும் துகிரும் ஆரமும் அகிலும்' - இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல்
   அ) மணிமேகலை ஆ) தேம்பவாணி இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
5. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
   இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
6. மலர்விழி பாடினாள் - இத்தொடர்
   அ) பொதுமொழி ஆ) தனிமொழி இ) தொடர்மொழி ஈ) அடுக்குத்தொடர்
7. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது. வானம் இருண்டது. வாடைக் காற்று வீசியது — என்ற நயமிகு தொடருக்கு ஏற்ற தலைப்பு.
   அ) வனத்தின் நடனம் ஆ) மிதக்கும் வாசம் இ) மொட்டின் வருகை ஈ) காற்றின் பாடல்
8. மெய்க்கீர்த்தி என்பது
   அ) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லால் பொறிக்கப்படுபவை
   ஆ) மன்னர்களின் புகழை ஓலைச்சுவடிகளில் எழுதிவைப்பது
   இ) ஒருவரது புகழைப் புலவர்கள் புகழ்ந்து பாடும் இலக்கிய வகை
   ஈ) அறக்கருத்துகள் அடங்கிய நூல்
9. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
   அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
10. தமிழனத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது
    அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
11. 'கானடை' என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க
    அ) கான் அடை - காட்டைச் சேர் ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
    இ) கால் நடை - காலால் நடத்தல் ஈ) கால் உடை - காலால் உடைத்தல்

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை
எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்?
முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும்
விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்."


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. எந்தமிழ்நா என்பதனைப் பிரித்தால் இவ்வாறு வரும் :

அ) எந் + தமிழ் + நா ``ஆ) எந்த + தமிழ் + நா இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

13. செந்தமிழ் என்பது :

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத் தொகை ஈ) உம்மைத்தொகை

14. உள்ளுயிரே என்று கவிஞர் யாரை அழைக்கிறார்?

அ) தம் தாயை ஆ) தமிழ் மொழியை இ) தாய் நாட்டை ஈ) தம் குழந்தையை

15. வேறோர் புகழுரையும் - இத்தொடரில் 'வேறோர்' என்பது :

அ) தமிழர் ஆ) சான்றோர் இ) வேற்றுமொழியினர் ஈ) புலவர்

பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

பிரிவு — 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **4 x 2 = 8**

16. வசன கவிதை - குறிப்பு வரைக.

17. விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க.

அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.

ஆ) 1906-ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

18. குறிப்பு வரைக - அவையம்.

19. "மன்னுஞ் சிலம்பே மணிமே கலைவடிவே!

முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

20. தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.

21. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி** **5 x 2 = 10**

வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

22. சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.

அ) இன்சொல் ஆ) எழுகதிர்

23. 'வாழ்க' — பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:

அ) விடு — வீடு ஆ) கொடு — கோடு

25. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.

26. கலைச் சொற்கள் தருக: அ) Belief ஆ) Philosopher

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா :

கூட்டப்பெயர்களை எழுதுக: அ) கல் ஆ) ஆடு

27. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய ;மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?

28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்
ஓதி யுனர்ந்தின் புருவோமே."


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 2 X 3 = 6

29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது."

- இது போல் இளம் பயிர் வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?

ஆ) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?

இ) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?

31. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2 X 3 = 6

வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. கம்பராமாயணம் - நூற்குறிப்பு வரைக.

33. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "அன்னை மொழியே" - எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல்.

(அல்லது)

ஆ) "நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

பிரிவு - 3 2 X 3 = 6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.

37. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்

அருவினையும் மாண்ட தமைச்சு. - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 X 5 = 25

38. அ) கருணையனின் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

(அல்லது)

ஆ) 'காலக்கணிதம்' கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக.

39. அ) பெருந்தொற்று ஏற்படுவதைத் தடுக்கத் தேவையான முன்னெச்சரிக்கைகளை விவரித்துச் சிற்றூரில் உள்ள உங்களது தாத்தா பாட்டிக்குக் கடிதம் ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்தது செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. வீட்டு எண் : 21, வ.உ. சிதம்பரனார் தெரு, கரூர் மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த வெற்றிச்செல்வனின் மகன் குணசேகரன் மேல்நிலை வகுப்பில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை குணசேகரனாகக் கருதி கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்புச் சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினை நிரப்புக.

42. இன் சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:

**The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.**

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி, அவனுக்குள்ளே சமூகம் சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகிறது. இந்த மகிழ்ச்சிப்பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்ககால அறங்கள் இயல்பானவை.

1) மனிதன் எப்படிப்பட்டவன்?
2) மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது?
3) மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும்?
4) அறநெறிக்காலம் எனப்படுவது எது?
5) சங்ககால அறங்கள் எப்படிப்பட்டவை?

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி 3 X 8 = 24

43. அ) சங்க காலத்து அறங்கள் இன்றும் தேவையே என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தந்து விரிவாக விளக்குக.

(அல்லது)

ஆ)தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு - சாலைவிதிகள் - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துகளைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு, 'மக்கள் பணியே மகத்தான பணி' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக

முன்னுரை - தமிழகம் தந்த தவப்புதல்வர் - நாட்டுப்பற்று - மொழிப்பற்று - பொதுவாழ்வில் தூய்மை - எளிமை - மக்கள் பணியே மகத்தான பணி - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அரசு வினாத்தாள் ஜூலை - 2022

### பத்தாம் வகுப்பு

### மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

#### பகுதி - I (15 மதிப்பெண்கள்)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி 15X1=15

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது :

(அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும்

(இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்

2. "பெரிய மீசை" சிரித்தார் - கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது ?

(அ) பண்புத் தொகை (ஆ) உவமைத் தொகை

(இ) அன்மொழித் தொகை (ஈ) உம்மைத் தொகை

3) உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது ?

(அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் (ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

(இ) மருத்துவரிடம் நோயாளி (ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4) "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
-என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?

(அ) தமிழ் (ஆ) அறிவியல் (இ) கல்வி ஈ) ஒழுக்கம்

5) கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் (ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

(இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் (ஈ) அங்கு வறுமை இல்லாததால்

6) இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்:

(அ) நாட்டைக் கைப்பற்றல் (ஆ) நிரை கவர்தல்

(இ) வலிமையை நிலைநாட்டல் (ஈ) கோட்டையை முற்றுகையிடல்

7. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் :

(அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா

8. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி :

(அ) உவமை (ஆ)தற்குறிப்பேற்றம் (இ) உருவகம் (ஈ) தீவகம்

9. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்' -என்று கூறியவர் :

(அ) திரு.வி.க. (ஆ) க. சச்சிதானந்தன் (இ) நம்பூதனார் (ஈ) தனிநாயக அடிகள்

10. மொழி ஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார் ?

(அ) தமிழழகனார் (ஆ) கம்பர் (இ) தேவநேயப் பாவாணர் (ஈ) வைரமுத்து

11. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ?

(அ) கூவிளம் தேமா மலர் (ஆ) கூவிளம் புளிமா நாள்

(இ) தேமா புளிமா காசு (ஈ) புளிமா தேமா பிறப்பு

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா;


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

இலைகளின்மீதும், நீரலைக ளின்மீதும் உராய்ந்து, மிகுந்த

ப்ராண - ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.

12. 'மயலுறுத்து' என்பதன் பொருள் :

(அ) விளங்கச் செய் (ஆ) மயங்கச் செய் (இ) அடங்கச் செய் (ஈ) சீராக

13. ப்ராண ரஸம் - பொருள் தருக.

(அ) உயிர் வளி (ஆ) கார்பன்-டை-ஆக்ஸைடு (இ) ஹைட்ரோ கார்பன் (ஈ) கந்தக-டை -ஆக்ஸைடு

14. 'மிகுந்த இலக்கணக் குறிப்பு தருக.

(அ) வினையெச்சம் (ஆ) முற்றெச்சம் (இ) பெயரெச்சம் (ஈ) வினைத்தொகை

15. நீரலைகளின் - பிரித்தெழுதுக.

(அ) நீர் + அலைகளின் (ஆ) நீரின் +அலைகளின் (இ) நீரலை + களின் (ஈ) நீர் + அலைகளின்

## பகுதி - II (மதிப்பெண்கள்:18)

### பிரிவு -1

குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி 4 x 2 = 8

21- க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

16. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும் :

(அ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர். (ஆ) பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்

18. தேம்பாவணி - குறிப்பு வரைக.

19. தண்ணீர் குடி, தயிர்க் குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்கவும்.

20. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ?

21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு -2

குறிப்பு: எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. 5 x 2 = 10

22. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார். அவர் யார் ? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் பயனிலைகள் யாவை ?

23. "ஒலித்து" - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. பழமொழிகளை நிறைவு செய்க.

(அ) உப்பில்லாப்------------------ (ஆ) ஒரு பானை-------------------------

25. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

26. கலைச்சொற்கள் தருக. (அ) Vowel (ஆ) Discussion

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.

குறிப்பு - எதிர்மறையாக மாற்றுக.

(அ) மீளாத் துயர்

(ஆ) பார்த்த படம்

27. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.

28. சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்கவும்.

(அ) பழமைக்கு எதிரானது - எழுதுகோலில் பயன்படும்

(ஆ) ஓரெழுத்தில் சோலை - இரண்டெழுத்தில் வனம்

## பகுதி - III

(மதிப்பெண்கள் : 18)

### பிரிவு -1

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 2 x 3 = 6

29. " தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம்சுட்டிப் பொருள் விளக்குக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகி, ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது.

(அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.

(ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ? .

(இ) பெய்த மழை இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக

31. ஜெயகாந்தனின் திரைப்படப் படைப்புகளைக் கூறுக.

பிரிவு -2

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2 X 3 = 6

34. க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. பெருமாள் திருமொழி - நூற் குறிப்பு வரைக.

33. பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "வாளால் அறுத்துச்" எனத் தொடங்கும் குலசேகராழ்வார் பாடல்

(அல்லது)

(ஆ) "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்,

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி. 2 X 3 = 6

35) பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப் பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக் கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

36) "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது ?

37) உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். - இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV (மதிப்பெண்கள் : 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 5 x 5 = 25

38) (அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும்

(அல்லது)

(ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. (அ) பள்ளித் திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர்

அல்லது

(ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



41. பணிவாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் படிவத்தை கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக.

பெயர் : அருளன். தந்தை : செல்வம். முகவரி : எண். 25, திலகர் தெரு. மதுரை வடக்கு 601 105.

(ஆ) மொழிபெயர்க்க :

**Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices, Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.**

(அல்லது)

42. (அ) பள்ளியிலும், வீட்டிலும் நீ கடைப்பிடிக்கக்கூடிய நற்பண்புகளைப் பட்டியலிடுக.

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பூக்களைப் பற்றிய அரிய இலக்கியச் செய்திகள்பூ உண்டு. ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் ஆல மலர், பலா மலர். மலர் உண்டு; பெயரும் உண்டு; ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் : சுள்ளி மலர்; பாங்கர் மலர், அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயேபொதிந்திருக்கும் மலர்கள் : அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா, பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம் பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகுகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு. பூளை, குரீஇப் பூளை இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப் பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும், மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒரு வகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

(i) கண்ணிற்குக் காட்சி தராமல் காண்டற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் எவை ?

(ii) புறத்தே காட்சிப்படாமல் உள்ளே பொதிந்திருக்கும் மலர்கள் யாவை ?

(iii) இனிப்பான பூக்கள் எது ?

(iv) எந்தப் பூ குடிநீருக்கு மணத்தை ஏற்றும் ?

(v) மூங்கில் அரிசி என்றால் என்ன ?

## பகுதி - V (மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி **3 x 8 = 24**

43. (அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்கவும்..

அல்லது

(ஆ) தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து எழுதுக.

44. (அ) இராமானுசர் நாடகத்தினைச் சுருக்கி கதையாய் எழுதுக.

அல்லது

(ஆ) 'மங்கையராய்ப் பிறப்பதற்கே" என்னும் பாடத்தில் இடம் பெற்றுள்ள மூவர் பற்றி சுருக்கி எழுதுக.

45. (அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதித் தலைப்பிடுக.

முன்னுரை - கல்பனா சாவ்லா இளமைப் பருவம் - விண்வெளிப் பயணம் விண்வெளி சாதனைகள் - முடிவுரை

அல்லது

(ஆ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரையாக எழுதுக.

முன்னுரை - பொருட்காட்சி வகைகள் - சென்னையில் அரசு பொருட்காட்சி - துறை அரங்குகள் - பொழுதுபோக்கு விற்பனை - பொருட்காட்சியால் விளையும் நன்மைகள் - முடிவுரை


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் ஏப்ரல் - 2023

### பத்தாம் வகுப்பு

### மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (மதிப்பெண்கள்: 15)** 15 X 1 = 15

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

1) 'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்' நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.

(அ) இலையும் சருகும் (ஆ) தோகையும் சண்டும்

(இ) தாளும் ஓலையும் (ஈ) சருகும் சண்டும்

2. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?

(அ) அங்கு வறுமை இல்லாததால்

(ஆ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்

(இ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

(ஈ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்

3. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) உழவு, மண், ஏர், மாடு (இ) உழவு, ஏர், மண், மாடு

(ஆ) மண், மாடு, ஏர். உழவு (ஈ) ஏர் உழவு,மாடு, மண்

4."பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க" என்று

(அ) கருணையன், எலிசபெத்துக்காக (ஆ) எலிசபெத், தமக்காக வேண்டினார்.

(இ) கருணையன், பூக்களுக்காக (ஈ) எலிசபெத், பூமிக்காக

5.பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள்

(அ) துலா (ஆ) சீலா (இ) குலா (ஈ) இலா

6. அருந்துணை என்பதைப் பிரித்தால்

(அ) அருமை + துணை (ஆ) அரு + துணை

(இ) அருமை + இணை (ஈ) அரு + இணை

7.தேர்ப்பாகன் - இத்தொடரில் அமைந்துள்ள தொகையைத் தெரிவு செய்க.

(அ) வினைத்தொகை (ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை

(இ) பண்புத்தொகை (ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

8. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.

(அ) உதியன் : சேரலாதன் (ஆ) அதியன் : பெருஞ்சாத்தன்

(இ) பேகன் : கிள்ளிவளவன் (ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

9.' நாற்றிசையும் செல்லாத நாடில்லை" "ஐந்துசால்பு ஊன்றிய தூண்" இந்தச் செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும் அவற்றிற்கான தமிழ் எண்களையும் தேர்க.

(அ) நான்கு, ஐந்து ச. ரு (ஆ) மூன்று, நான்கு - ங, ச

(இ) ஐந்து, ஏழு ரு, எ (ஈ) நான்கு. ஆறு - ச. சு

10. 'கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும்" - பாரதியார் இப்பாடலடியில் இடம்பெற்றுள்ள வழுவமைதி.

(அ) திணை வழுவமைதி (ஆ) பால் வழுவமைதி

(இ) மரபு வழுவமைதி (ஈ) கால வழுவமைதி

11. மகிழ் எவ்வகைத் தொடர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்..

(அ) பெயரெச்சத்தொடர் (ஆ) வினையெச்சத்தொடர்

(இ) வேற்றுமைத்தொடர் (ஈ) விளித்தொடர்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"

12. இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?
(அ) நீதிவெண்பா (ஆ) புறநானூறு (இ) மணிமேகலை (ஈ) சிலப்பதிகாரம்

13. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.
(அ) பகர்வனர் : பட்டினும் (ஆ) பட்டினும் ; கட்டினும்
(ஈ) பட்டினும்; மயிரினும் (இ) கட்டும்; தூசும்

14. காருகர்பொருள் தருக.
(அ) உழவர் (ஆ) நெசவாளர் (இ) பொற்கொல்லர் (ஈ) காவலர்

15. இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் :
(அ) பூக்களும் : சந்தனமும் (ஆ) பூக்களும் ; அகிலும்
(இ) அகிலும் : சந்தனமும் (ஈ) பட்டும் ; சந்தனமும்

## பகுதி - II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 4 x 2 = 8

16. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
(அ) கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.
(ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

18. குறிப்பு வரைக - 'சதாவதானம்'.

19. மெய்க்கீர்த்திப் பாடுவதன் நோக்கம் யாது ?

20. குறிப்பு வரைக - "அவையம்".

21. 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி 5 x 2 = 10

வினா எண் 21-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

22. கீழ்க்காணும் ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக.
(அ) உதகமண்டலம் (ஆ) திருநெல்வேலி (இ) சைதாப்பேட்டை (ஈ) கும்பகோணம்

23. பழமொழிகளை நிறைவு செய்க,
(அ) ஒரு பானை (ஆ) அளவுக்கு

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக - "ஒலித்து".

25. கலைச்சொற்கள் தருக. (அ) Patent (ஆ) Storm
குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.
தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வாள், பொன், பூ

26. அடிக்கோடிட்ட தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக. அன்புச்செல்வன் திறன் பேசியின் தொடுதிரையில் படித்துக் கொண்டிருந்தார்.

27. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
(அ) மனக்கோட்டை (ஆ) கண்ணும் கருத்தும்

28. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எடுத்துக்காட்டுடன் எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - III (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு - 1

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி** 2 X 3 = 6

29. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதைப் பற்றி எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம், அரசன். அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

(அ) எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது ?

(ஆ) பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?

(இ) யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது ?

31.சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வதுபோல் ஓர் உரையாடல் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி.** 2 X 3 = 6

**வினா எண் 34-க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" - இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

33. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை எழுதுக.

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "அருளைப் பெருக்கி" - எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல். ( அல்லது)

(ஆ) 'மாற்றம்" எனத்தொடங்கி "சாலை" என முடியும் காலக்கணிதப் பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2 X 3 = 6

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த
பூங்கொடி வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர்
நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் வர்கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

36. வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு - குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.

37. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.
இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.

## பகுதி - IV (மதிப்பெண்கள்: 25)

**அனைத்து வினாக்களுக்கு விடையளி.** 5 X 5 = 25

38. (அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)

(ஆ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதை குறள்வழி விளக்குக.

39. (அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்கு பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) மருந்தகம் ஒன்றிலிருந்து உங்கள் தாத்தா வாங்கி வந்த மருந்தின் பயன்பாட்டுத் தேதி முடிவடைந்ததை அறிந்த நீங்கள், அந்த மருந்தகத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதாரத்துறை ஆய்வாளர் அவர்களுக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்றை எழுதுக.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



41. அமுதன் தன் தந்தை மாணிக்கமணி அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினர் ஆக வேண்டினான். அவரும் அமுதனிடம் 200/- ரூபாயும், 15 காந்தி தெரு, குமாரபாளையம் நீலகிரி மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார், கிளை நூலகத்திற்குச் சென்ற அமுதனாக, தேர்வர் தன்னைக் கருதி,கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

ஆ) மொழிபெயர்க்க:

**Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.**

42. (அ) பள்ளியிலும் வீட்டிலும் நீங்கள் நடத்துகொள்ளும் முறைகளைப் பட்டியலிடுக. (அல்லது)

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும் போது நான் வாடைக் காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன்.

(i) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது ?

(ii) ஊதைக் காற்று என்று அழைப்பதேன் ?

(iii) மேற்கு என்பதன் மற்றொரு பெயர் என்ன ?

(iv) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது ?

(v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.

## பகுதி - V (மதிப்பெண்கள்: 24)

<u>அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி</u> **8 X 3 = 24**

43. (அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

44. (அ) 'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'
என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்கவும். (அல்லது)

(ஆ) 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.

45. (அ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக.
குறிப்புகள் : முன்னுரை - அரசுப் பொருட்காட்சி அமைவிடம் - பல்வித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - அடைந்த உணர்வுகளும் நன்மைகளும் - முடிவுரை.

(அல்லது)

(ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று எழுதுக. முன்னுரை - கொரோனா பெருந்தொற்று - தடுப்பு நடவடிக்கைகள் விழிப்புணர்வுச் செயல்பாடுகள் - நமது கடமைகள் - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## அரசு வினாத்தாள் - ஜூன் - 2023

பத்தாம் வகுப்பு

மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

### பகுதி - I (15 மதிப்பெண்கள்)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது:
   (அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் (ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   (இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் (ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. பின்வருவனவற்றுள் முறையான தொடர் ;
   (அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
   (ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு
   (இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
   (ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு
3. 'செங்காந்தள்' - என்ற சொல்லில் அமைந்துள்ள தொகையைத் தேர்க.
   (அ) உவமைத் தொகை (ஆ) பண்புத் தொகை
   (இ) உம்மைத் தொகை (ஈ) வேற்றுமைத் தொகை
4. பரியாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?
   (அ) வானத்தையும் பாட்டையும் (ஆ) வானத்தையும் புகழையும்
   (இ) வானத்தையும் பூமியையும் (ஈ) வானத்தையும் பேரொலியையும்
5. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?
   (அ) தமிழ் (ஆ) அறிவியல் (இ) கல்வி (ஈ) இலக்கியம்
6. கரகாட்டத்தைக் 'கும்பாட்டம்' என்றும் 'குடக்கூத்து' என்னும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது ?
   (அ) கரகாட்டம் என்றால் என்ன ? (ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
   (இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை ? (ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?
7. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
   (அ) வேற்றுமை உருபு (ஆ) எழுவாய் (இ) உவம உருபு (ஈ) உரிச்சொல்
8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக மா.பொ.சி கருதியது
   (அ) திருக்குறள் (ஆ) புறநானூறு (இ) கம்பராமாயணம் (ஈ) சிலப்பதிகாரம்
9. 'எந்தமிழ்நா' என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
   (அ) எந்+தமிழ்+நா (ஆ) எந்த+தமிழ்+நா (இ) எம் + தமிழ் + நா (ஈ) எந்தம் + தமிழ் + நா
10. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்:
    (அ) அகவற்பா (ஆ) வெண்பா (இ) வஞ்சிப்பா (ஈ) கலிப்பா
11. ஓர் ஆண்டின் மொத்த மாதங்களின் எண்ணிக்கையினைக் குறிக்கும் தமிழ் எண்ணைத் தேர்ந்தெடுக்க.
    (அ) கரு (ஆ) க உ (இ) கங (ஈ) க.ச

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக

சக்தி குறைந்து போய், அதனை அவித்துவிடாதே
பேய்போல வீசி அதனை மடித்து விடாதே.
மெதுவாக, நல்ல லயத்துடன், நெடுங்காலம்
நின்று வீசிக் கொண்டிரு
உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்.
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

12. இப்பாடலில் இடம் பெற்றுள்ள 'லயத்துடன்' என்ற சொல்லின் பொருள்:

(அ) சுழலாக (ஆ) கடுமையாக (இ) சீராக (ஈ) வேகமாக

13. பாடலில் இடம் பெற்றுள்ள இயைபுச் சொற்களைத் தேர்க.

(அ) அவித்து விடாதே. நெடுங்காலம் (ஆ) மடித்து விடாதே. பாடுகிறோம்

(இ) மெதுவாக, லயத்துடன் (ஈ) பாடுகிறோம். கூறுகிறோம்

14. இக்கவிதையை இயற்றியவர்:

(அ) திரு.வி.க. (ஆ) பாரதியார் (இ) பாரதிதாசன் (ஈ) மு. மேத்தா

15. 'நெடுங்காலம்' என்ற சொல்லைப் பிரித்தால் கிடைப்பது

(அ) நெடுமை+காலம் (ஆ) நெடிய+காலம் (இ) நெடு+காலம் (ஈ) நெடுங்+காலம்

## பகுதி - II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு — 1

குறிப்பு :: எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி. **4 x 2 = 8**

21 -ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

(அ) தமிழாதுள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கையை சுடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே ம.பொ.சி வழங்கினார்.

(ஆ) விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.

18. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

19, 'நஞ்சம் எளியன் பகைக்கு' - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்ப்பாடுகளையும் எழுதுக.

20. 'நமக்கு உயிர் காற்று

காற்றுக்கு வரம் மரம் - மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்'

இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.

21. 'எப்பொருள்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக

### பிரிவு-2

குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி . **5x2=10**

22. கலைச்சொல் தருக. (அ) Vowel (ஆ) Emblem

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா.

கூட்டப் பெயர்களை எழுதுக.

23. 'கிளர்ந்த' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

24. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக. பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

25. பாரதியார் கவிஞர். நூலகம் சென்றார், அவர் யார் ? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை ?

26. சந்தக் கவிதையில் பிழைகளைத் திருத்துக.

"தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை

தேரும் சிலப்பதி காறமதை ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம் ஓதி யுனர்ந்தின் புருவோமே"

27. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

28. மரபுத் தொடரைப் பொருத்தமான தொடரில் அமைத்து எழுதுக

(அ) அள்ளி இறைத்தல் (ஆ) ஆறப்போடுதல்


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - III (மதிப்பெண்கள் :18)

பிரிவு — 1

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளி 2 x 3 = 6

29. 'சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே' என்பதைக் குறித்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம் மலையாளம், மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

(அ) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் எத்தனை நூல்கள்வரைமொழி பெயர்க்கப்படுகின்றன ?

(ஆ) தமிழ் நூல்கள் எந்த மொழியில் அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது ?

(இ) மொழிபெயர்ப்பின் பயன் என்ன ?

31. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்து சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2 x 3 = 6

34 -ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன் ? விளக்குக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

34. அடிபிறழாமல் எழுதுக.

(அ) "அன்னை மொழியே" - எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல். (அல்லது)

(ஆ) "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரச் செய்யுள்.

பிரிவு-3

குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி 2 x 3 = 6

35. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.
இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக..

36. தற்குறிப்பேற்ற அணியினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். - இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி எழுதுக.

பகுதி = IV (மதிப்பெண்கள் : 25)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளி 5 x 5 = 25

38. (அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

(ஆ) பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

39. (அ) உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர்வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

(ஆ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com



41. எண்.46, திரு.வி.க. தெரு. கடம்பவனம், நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழினியன் என்பவரின் மகன் இளஞ்செழியன் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்தார். இளஞ்செழியன், கடம்பவனம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்பு சேருவதற்குக் கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. (அ) இன்சொற்களைப் பேசுவதால் விளையும் நன்மைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.

அல்லது

(ஆ) மொழிபெயர்க்க :-

**Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with small orchestra forms a Koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.**

குறிப்பு :-

செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்றுவினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி அவனுக்குள்ளே சமூகம் - சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்ககால அறங்கள் இயல்பானவை.

(i) மனிதன் எப்படிப்பட்டவன் ?
(ii) மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது ?
(iii) மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும்?
(iv) அறநெறிக்காலம் எனப்படுவது எது ?
(v) சங்ககால அறங்கள் எப்படிப்பட்டவை ?

## பகுதி - V

மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளி. **3 x 8 = 24**

43. (அ) காற்று மாசு அடைவதைப் போன்று நிலம் மாசு அடைவதை விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்று எழுதுக.

44. (அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

(ஆ) அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. (அ) குறிப்புகளைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரைஎழுதுக.
குறிப்புகள் : முன்னுரை - தமிழன்னையின் அணிகலன்கள் - தமிழ்ச் சான்றோர் - தமிழின் வளர்ச்சி - தமிழின் எதிர்காலம் - முடிவுரை.

(அல்லது)

(ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பிடுக.
குறிப்புகள் : முன்னுரை - சாலைப்பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு - ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் - விபத்துக்களைத் தவிர்ப்போம் - விழிப்புணர்வு தருவோம் - முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அரசு வினாத்தாள் ஏப்ரல் – 2024

## பத்தாம் வகுப்பு

## மொழிப்பாடம்: தமிழ்

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி மதிப்பெண்கள்: 100

பகுதி - I (15 மதிப்பெண்கள்)

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே.

(அ) பாடிய, கேட்டவர் (ஆ) பாடல், பாடிய

(இ) கேட்டவர், பாடிய (ஈ) பாடல், கேட்டவர்

2. 'மலர்க்கை' தொகையின் வகையைத் தேர்க.

(அ) பண்புத் தொகை (ஆ) உவமைத் தொகை

(இ) அன்மொழித் தொகை (ஈ) உம்மைத் தொகை

3. பரிபாடல் அடியில் 'விசும்பும் இசையும்' என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?

(அ) வானத்தையும் பாட்டையும் (ஆ) வானத்தையும் புகழையும்

(இ) வானத்தையும் பூமியையும் (ஈ) வானத்தையும் பேரொலியையும்

4. தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு.
-இக்குறட்பாவில் இடம்பெறும் அடி எதுகைச் சொற்களைத் தேர்க.

(அ) தாளாண்மை தகைமைக்கண் (ஆ) தாளாண்மை - வேளாண்மை

(இ) தகைமைக்கண் — தங்கிற்றே (ஈ) வேளாண்மை - செருக்கு

5. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா ?" என்று வழிப்போக்கர் கேட்டது "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது வினா. விடை.

(அ) ஐய வினா, வினா எதிர்வினாதல் (ஆ) அறி வினா, மறை விடை

(இ) அறியா வினா, சுட்டு விடை (ஈ) கொளல் வினா, இனமொழி விடை

6. 'குழந்தை வந்தது' என்ற எழுவாய்த் தொடரின் விளித் தொடரைத் தேர்க.

(அ) குழந்தையுடன் வா (ஆ) வந்த குழந்தை

(இ) குழந்தையே வா! (ஈ) குழந்தை வந்தது

7. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்களைத் தேர்க.

(அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் (ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

(இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் (ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. மேன்மை தரும் அறம் என்பது

(அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது

(ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

(இ) புகழ்கருதி அறம் செய்வது

(ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

9. காசிக் காண்டம் என்பது :

(அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் (ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்

(இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் (ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

10. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.

(அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

(இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

11. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு :

(அ) சிங்கப்பூர் (ஆ) மலேசியா

(இ) இந்தியா (ஈ) இலங்கை

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

**"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"**

12. பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க.

(அ) சிலப்பதிகாரம் (ஆ) காசிக்காண்டம்

(இ) நற்றிணை (ஈ) முல்லைப்பாட்டு

13. 'நனந்தலை உலகம்' என்பதன் சரியான பொருளைத் தேர்க.

(அ) சிறிய உலகம் (ஆ) குளிர்ந்த உலகம்

(இ) அகன்ற உலகம் (ஈ) வெப்பமான உலகம்

14. 'தடக்கை' -இச்சொல்லின் இலக்கணக் குறிப்பைத் தேர்க.

(அ) உரிச்சொல் தொடர் (ஆ) பண்புத் தொகை

(இ) வினைத் தொகை (ஈ) வேற்றுமைத் தொடர்

15. பாடலின் ஆசிரியரைத் தேர்க.

(அ) தமிழழகனார் (ஆ) நப்பூதனார்

(இ) கீரந்தையார் (ஈ) இளங்கோவடிகள்

## பகுதி - II

**(மதிப்பெண்கள் : 18)**

### பிரிவு -1

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **4x2=8**

**21-வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.

(அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.

(ஆ) பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.

18. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

19. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக. பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

20. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.

21. 'முயற்சி' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

22. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.

23. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.

(அ) கொடு - கோட (ஆ) இயற்கை - செயற்கை

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. **மயங்கிய**

25. கலைச்சொற்கள் தருக.

**(1) Biotechnology** **(2) Myth**

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.

குறிப்பு : எதிர்மறையாக மாற்றுக.

(அ) பார்த்த படம் (ஆ) எழுதாக்கவிதை

26. குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பதைப் போன்று வினாத் தொடர்கள் அமைக்கவும்.

குறிப்புகள்: (1) சுவைக்காத இளநீர் (2) விடுமுறை நாள்

27. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். - இதில் உள்ள வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

28. 'வேங்கை' என்பதைத் தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

(மதிப்பெண்கள் : 18)

பிரிவு -1

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.

30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

(அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?

(ஆ) பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.

(இ) பெய்த மழை வினைத்தொகையாக மாற்றுக.

31. நீங்கள் அறிந்த நிகழ்கலைக் கலைஞர் ஒருவரைப் பற்றியும் அவரது கலைத்திறன் பற்றியும் எழுதுக.

பிரிவு -2

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண்** **2x3=6**

**34 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

33. நெடுநாளாகப் பார்க்க பண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக் குறித்து எழுதுக.

34. **அடிபிறழாமல் எழுதுக.**

(அ) "தென்னன் மகளே" - எனத் தொடங்கி "முடிதாழ வாழ்த்துவமே" - என முடியும் அன்னை மொழியே பாடல் (அல்லது)


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(ஆ) 'வாளால் அறுத்துச் சுடினும்'' - எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.

**பிரிவு - 3**

**குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** **2×3=6**

35. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும்'.

**-இக்கூற்றில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற் பெயர்களாக மாற்றி எழுதுக.**

36. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள். -இத்திருக்குறளில் பயின்று வரும் அணியைக் குறிப்பிட்டு விளக்குக.

37. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். - **இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

**பகுதி - IV**

**(மதிப்பெண்கள் : 25)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5x5-25**

38. (அ) தமிழர் மருத்துவ முறைக்கும், நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து விவரித்து எழுதுக.

**(அல்லது)**

(ஆ) 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற வள்ளுவரின் கூற்றினை விளக்கி, உங்கள் கருத்தை எழுதுக.

39. (அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

(ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.




41. தமிழ்வேந்தன் என்பவரின் மகள் வான்மலர் அரசு உயர்நிலைப் பள்ளி, விருத்தாசலம், கடலூர் மாவட்டத்தில் 10 -ஆம் வகுப்பு முடித்திருக்கிறார். அதே ஊரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் 11 ஆம் வகுப்பு சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை வான்மலராகக் கருதி, கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்ப் படிவத்தினை நிரப்புக.

42. (அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

| அறங்கள் | நன்மைகள் |
|---|---|
| | |
| | |
| | |
| | |


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

(அல்லது)

**(ஆ) மொழிபெயர்க்கவும்.**

**Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.**

குறிப்பு செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

(i) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு ?

(ii) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது ?

(iii) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர் ?

(iv) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர்?

(v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினைத் தருக.

பகுதி -V

**(மதிப்பெண்கள் : 24)**

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். **3x8=24**

43. (அ) ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா ? இக்கருத்துகளை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' என்ற தலைப்பில் விவரித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) எவரேனும் ஓர் அறிஞர்/சான்றோர்/புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன்வரலாறாக மாற்றி எழுதுக.

44. (அ) அழகிரி சாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயத்தினைச் சுவைபட விளக்கி எழுதுக.

45. (அ) பள்ளி ஆண்டு விழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை/கட்டுரை/ சிறுகதை/கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு : நூலின் தலைப்பு நூலின் மையப்பொருள் மொழிநடை — வெளிப்படுத்தும் கருத்து - நூலின் நயம் - நூல் கட்டமைப்பு சிறப்புக் கூறு நூல் ஆசிரியர்.

(அல்லது)

(ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி, 'சாலைப் பாதுகாப்பு' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை சாலை விதிகளை அறிவோம் ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் விபத்துகளுக்கான காரணங்கள் தேவையான விழிப்புணர்வு நம் கடமை முடிவுரை.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# அரசு வினாத்தாள் ஜூலை – 2024

**பத்தாம் வகுப்பு**

**மொழிப்பாடம்: தமிழ்**

நேரம்: 15 நிமிடம் + 2.30 மணி | மதிப்பெண்கள்: 100

**பகுதி - I (15 மதிப்பெண்கள்)**

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 15X1=15

1. வேர்க்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை :
   (அ) குலை வகை (ஆ) மணி வகை
   (இ) கொழுந்து வகை (ஈ) இலை வகை
2. போரில் வெற்றி பெற்ற மன்னன் சூடிக்கொள்ளும் பூவைத் தேர்க.
   (அ) கரந்தைப் பூ (ஆ) வாகைப் பூ
   (இ) தும்பைப் பூ (ஈ) நொச்சிப் பூ
3. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?
   (அ) தமிழ் (ஆ) அறிவியல்
   (இ) கல்வி (ஈ) இலக்கியம்
4. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்
   (அ) முல்லை. குறிஞ்சி, மருத நிலங்கள் (ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   (இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் (ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்
5. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும், சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது:
   (அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் (ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
   (இ) அறிவியல் முன்னேற்றம் (ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
6. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் .
   (அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது. (ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
   (இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம். (ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்.
7. பின்வருவனவற்றுள் முறையான தொடர்:
   (அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   (ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   (இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
   (ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.
8. 'கானடை' என்பதைப் பிரித்தால் வரும் சரியான பொருளைத் தேர்க.
   (அ) காவலுக்குச் செல்லுதல் (ஆ) காட்டைச் சேர்தல்
   (இ) காலை ஊன்றுதல் (ஈ) காத்து இருத்தல்
9. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்
   (அ) தமிழழகனார் (ஆ) அப்பாத்துரையார்
   (இ) தேவநேயப் பாவாணர் (ஈ) ரா. இளங்குமரனார்
10. நாலெழுத்தில் கண்சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும். இப்புதிருக்கான விடையைத் தேர்க.
    (அ) விண்மீன் (ஆ) நறுமணம்
    (இ) புதுமை (ஈ) காற்று
11. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது ?
    (அ) கரகாட்டம் என்றால் என்ன ? (ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
    (இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை ? (ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பாடலைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
கரு வளர் வானத்து இசையில் தோன்றி.
உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;
உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்.

12. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களைத் தேர்ந்தெடுக்க

(அ) கரு வளர் — வானத்து (ஆ)ஊழி ஊழ்
(இ) விசும்பில் கிளர்ந்த (ஈ) இசையில் - ஊழியும்

13. இப்பாடல் இடம்பெற்ற நூல்

(அ) முல்லைப்பாட்டு (ஆ) பரிபாடல்
(இ) நீதிவெண்பா (ஈ) திருக்குறள்

14. இப்பாடலின் ஆசிரியர்

(அ) நப்பூதனார் (ஆ) பூதஞ்சேந்தனார்
(இ) கீரந்தையார் (ஈ) குலசேகராழ்வார்

15. விசும்பு, இசை, ஊழி பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே

(அ) காற்று, முறை, கடல் (ஆ) மேகம், இடி, ஆழம்
(இ) வானம், பேரொலி, யுகம் (ஈ) வானம், காற்று, காலம்

## பகுதி - II

## (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு -1

குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும். **4 x 2 = 8**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

(அ) சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி

(ஆ) ம.பொ.சி. சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக இலக்கிய அறிவு பெற்றார்.

17. "மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

18. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ?

19. வறுமையின் காரணமாக உதவிகேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்துக் குறளின் கருத்து என்ன ?

20. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.

21. "எப்பொருள்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். **5 x 2 = 10**

22. உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

(அ) தாமரை இலை நீர்போல (ஆ) சிலை மேல் எழுத்து போல

23. பகுபத உறுப்பிலக்கணம் தருக : பொறித்த

24. தஞ்சம் எளியர் பகைக்கு - இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.

25. கலைச் சொற்கள் தருக.

**(1) Emblem** **(2) Belief**


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

குறிப்பு: செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

(தொடரைப் படித்து விடையைத் தேர்க.)

(அ) மீன் இருப்பது நீரில் தேன் இருப்பது (பூவில், மணலில்)

(ஆ) கல் சிலையாகுமெனில், நெல் ... ஆகும். (கரு, சோறு)

26. எதிர்மறையாக மாற்றுக.

(அ) மீளாத் துயர்

(ஆ) எழுதாக் கவிதை

27. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.

28. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

## பகுதி - III

(மதிப்பெண்கள் : 18)

### பிரிவு -1

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 ×3 = 6

29. உரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும் அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகிறேன். இவ்வாறாக மழைப்பொழிவைத் தருகின்றேன். இந்தியாவின் முதுகெலும்பு வேளாண்மைதானே! இவ்வேளாண்மை சிறப்பதிலும் நாடு தன்னிறைவு பெறுவதிலும் நான் பங்கெடுக்கின்றேன். இந்தியாவிற்குத் தேவையான எழுபது விழுக்காடு மழையளவினைத் தென்மேற்குப் பருவக்காற்றாகக் கொடுக்கின்றேன்.

வினாக்கள் :

(அ) இந்தியாவின் முதுகெலும்பு எது ?

(ஆ) வடகிழக்குப் பருவக்காற்று வீசும் காலம் எது ?

(இ) இந்தியாவிற்குத் தென்மேற்குப் பருவக்காற்று கொடுக்கும் மழையின் அளவு யாது ?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

31. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'. இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.

### பிரிவு -2

குறிப்பு :எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன் ?

33. முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார் ?

34. (அ) அன்னை மொழியே' எனத் தொடங்கி, 'பேரரசே' என முடியும் பெருஞ்சித்திரனாரின் பாடலை எழுதுக.

(அல்லது)

(ஆ) 'நவமணி'' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலை எழுதுக.

### பிரிவு - 3

குறிப்பு: எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2×3=6

35. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது . - இக்குறளில் பயின்றுவரும் அணியை விளக்கி எழுதுக.

36. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். இப்பத்தியிலுள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.

37. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு. - இக்குறட்பாவினைஅலகிட்டு வாய்பாடு காண்க.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி - IV

### (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. (அ) வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

(அல்லது)


(ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. (அ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும். அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுது அடைந்த சாலைகளைச் சீரமைத்தும், மின் கம்பங்களைச் சரி செய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. குமார் தன் தந்தை செழியன் அவர்களிடம் நூலகத்தில் உறுப்பினராக வேண்டினான். அவரும் குமாரிடம் 500 ரூபாயும், 12 எழில்நகர், பாரதி தெரு, நாமக்கல் மாவட்டம் என்ற முகவரியிட்ட அடையாளச் சான்றையும் கொடுத்தார். கிளை நூலகத்திற்குச் சென்ற குமாராக தேர்வர் தன்னைக் கருதி, கொடுக்கப்பட்ட நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக. AL

42. (அ) இன்சொல் பேசுவதால் விளையும் நன்மைகள் மற்றும் தீயசொல் பேசுவதால் ஏற்படும் தீமைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) மொழிபெயர்க்கவும்.

**The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.**

குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். 'விருந்தே புதுமை' என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை, அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்; அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேயேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்- படை. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்து வந்து பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

வினாக்கள் :

(i) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது ?

(ii) விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவது யாது ?

(iii) நம் முன்னோர்களின் மகிழ்ச்சி எதில் இருந்தது ?

(iv) பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் விருந்தோம்பல் குறித்த செய்தியை எழுதுக.

(v) பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்றை எழுதுக.

பகுதி -V

(மதிப்பெண்கள் : 24)

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 x 8 = 24

43. (அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைக்கவும்.

44. (அ) 'அன்னமய்யா' என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் 'கோபல்லபுரத்து மக்கள்' கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

(ஆ) "பாய்ச்சல்" சிறு கதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டு எழுதுக.

45. (அ) முன்னுரை -விசும்பின் துளியும் பசும்புல் தலையும் - காற்று மாசு - பசுமையைக் காப்போம் - மரம் நமக்கு வரம் - நில மாசு - மழைநீர் உயிர்நீர் - நீர் மாசு - முடிவுரை இக்குறிப்புகளைப் பயன்படுத்தி இயற்கையைக் காப்போம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக

(அல்லது)

(ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.

குறிப்புகள் : முன்னுரை - அறிவியல் கண்டுபிடிப்புகள் வாழ்வை மேம்படுத்தும் அறிவியல் -எதிர்காலத் தொழில் நுட்பம் - மனிதனைக் கட்டுப்படுத்தும் அறிவியல் - முடிவுரை.

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது, கற்றல் நன்றே!
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
மூத்தோன் வருக என்னாதவருள்
அறிவுடையோனால் அரசுஞ் செல்லும் –புறநானூறு


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

# நூலக உறுப்பினர் படிவம்

_______________________________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ________________ மாவட்ட மைய நூலம்
உறுப்பினர் சேர்க்கை அட்டை

**அட்டை எண் :** **உறுப்பினர் எண் :**

1. பெயர் :
2. தந்தை பெயர் :
3. பிறந்த தேதி :
4. வயது :
5. படிப்பு :
6. தொலைபேசி எண் :
7. முகவரி :

(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

நான் ___________________________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ._______ சந்தா தொகை ரூ._______ ஆக மொத்தம் ரூ._______ ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறே**ன்.**

இடம் : தங்கள் உண்மையுள்ள,
நாள் :

திரு.திருமதி. செல்வி / செல்வன்______________________________

அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன.

அலுவலக முத்திரை
பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

**மேல் நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : தேதி : வகுப்பும் பிரிவும :

1. மாணவ / மாணவியின் பெயர் :

2. பிறந்த தேதி :

3. தேசிய இனம் :

4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :

5. வீட்டு முகவரி :

6. இறுதியாக படித்து முடித்த வகுப்பு :

7. பயின்ற மொழி :

8. பெற்ற மதிப்பெண்கள் :

9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண்.ஆண்டு | பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :

11. தாய்மொழி :

12. சேரவிரும்பும் படப்பிரிவும் பயிற்று மொழியும் :

**மாணவ / மாணவியர் கையொப்பம்**


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com
www.Padasalai.Net

## 3. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்ப படிவம்

1. மாணவர் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி :
4. தேசிய இனம் :
7. பெற்றோர் பாதுகாவலர் பெயர் :
6. இரத்தவகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :

9. தொலைபேசி / அலைபேசி எண் :
10. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :

12. சேர விரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் : மாணவர் கையெழுத்து

இடம் :

நாள் : பெற்றோர் பாதுகாவலர் கையெழுத்து


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## 4. பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப்பட்டியலை நிரப்புதல்

### தன் விவரப்பட்டியல்

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த தேதி மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :

   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்)

7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் :
9. தாய் மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி தகுதி :

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவணத்தில் ____________ பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கின்றேன்.

இப்படிக்கு,


Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com